பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

படர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 07 சனிக்கிழமை (23 10 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 329

ஈழத்தமிழரின் சுயநிர்ணய உரிமை; அங்கீகரிக்க புலிகள் வற்புறுத்து!

புனர்வாழ்வு அமைச்சு திடீர் முடிவு

5 ஆயிரம் பரல் ம.எண்ணெய் 'கோமாரி' கப்பலில் வரும்

யாழ்ப்பாணம், ஒக். 23

வடக்கில் இருந்து கொழும்பு நோக்கிச்சென்று கொண்டிருக்கும் 'கோமாரி' கப்பலில் 5 ஆயிரம் பரல் மண்எண்ணெய்யை அனுப்ப புனர்வாழ்வு அமைச்சு முடிவு செய்துள்ளதாக நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்துக்கு உடனடியாக 'றுகுணு', நிலகிரி' கப்பல்கள் மூலம் மண்எண்ணெய் அனுப்ப புனர்வாழ்வு அமைச்சு முன்னர் முடிவு செய்திருந்தது.

இரு கப்பல்களிலும் அனுப்பக்கூடிய தொகையான 5 ஆயிரம் பரல்களையும், ஒரே கப்பலில் — 'கோமாரி' கப்பலில் — அனுப்ப தற்சமயம் புனர்வாழ்வு அமைச்சு முடிவு செய்துள்ளதாக நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறையில் இருந்து பயணிகளுடன் சென்ற 'கோமாரி' கப்பல் அவர்களை திருகோணமலையில் இறக்கிவிட்டு தற்போது கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருப்பதாகக் கூறப்பட்டது.

29 ஸ்ரீலங்கா மீனவரை இந்தியா விடுவித்தது

ஸ்ரீலங்கா மீனவர்கள் 29 பேரை இந்தியா விடுதலை செய்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த ஒரு மாத காலமாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த இந்த மீனவர்கள் அவர்களின் மூன்று படகுகளுடன் விடுவிக்கப்பட்டனர் என்று ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

கடந்த வாரம் புதுடில்லியில் ஸ்ரீலங்காவின் வெளியுறவுச் செயலாளர் பேர்னாட் திலகரத்ன நடத்திய பேச்சுக்களை அடுத்தே 29 மீனவர்களும் விடுதலையாகினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இம் மீனவர்கள் இந்திய கடல் எல்லைப் பகுதியில் சக்திமிக்க தொலைத்தொடர்பு கருவிகளுடன் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சமயமே கைது செய்யப்பட்டனர் என்று இந்தியா குற்றம் சாட்டி இருந்ததும்

அதனை ஸ்ரீலங்கா அரசு மறுத்திருந்ததும் தெரிந்தவையே. [ஒ-6]

பல்கலைக்கழக அனுமதி;

பாதிக்கப்பட்ட மாணவர்கள் வியாழன் பேரணி நடத்துவர்

யாழ்ப்பாணம், ஒக் 23

அண்மையில் வெளியான பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப் புள்ளிகளால் அனுமதி கிடைக்காமல் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்கள் எதிர்வரும் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்றை நடத்தவுள்ளனர்.

யாழ். இந்துக் கல்லூரியில் நேற்று நடந்த கலந்துரையாடல் ஒன்றில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. பேரணி யாழ் பல்கலைக் கழகத்தில் இருந்து புறப்படும்.

இதேவேளை, பேரணியில் முடிவில் கையளிக்கப்படவுள்ள மகஜரில் சம்பந்தப்பட்ட மாணவர்கள் தாளை ஞாயிறு மாலை 4 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் சமூகமளித்து கையொப்பமிடுமாறு பாதிக்கப்பட்ட மாணவர்கள் ஒன்றியம் கேட்டுள்ளது. (ஒ)

பல்கலை. அனுமதி முறை மீளாய்வு செய்யப்படும்

ஜனாதிபதி டி. பி. அறிவிப்பு

கொழும்பு, ஒக். 23

இயன்றவரை நியாயமான முறையிலும் மாணர்கள் மத்தியில் அதிருப்தி ஏற்படுவதைக் குறைக்கும் வகையிலும் பல்கலைக்கழக அனுமதிக்கான தற்போதைய அனுமதி முறை மீளாய்வு செய்யப்படும்.

ஜனாதிபதி விஜேதுங்க நேற்று கொழும்பு றோயல் கல்லூரியின் 151 ஆவது பரிசளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோது இவ்வாறு தெரிவித்தார்.

கல்வி, உயர்கல்வி அமைச்சு பல்கலைக்கழக அனுமதி முறையை மீளாய்வு செய்யும் என்றும் அவர் அறிவித்தார். (உ)

கொமன்வெல்த் மாநாட்டு பிரதிநிதிகளிடம் கோரிக்கை

கொழும்பு, ஒக்டோபர் 23

ஈழத் தமிழரின் சுயநிர்ணய உரிமையை ஏற்று அதனை உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்குமாறு சைப்பிரஸில் கூடியிருக்கும் பொதுநல அமைப்பு ("கொமன்வெல்த்") நாடுகளின் தலைவர்களிடம் விடுதலைப் புலிகள் கோரியிருக்கின்றனர்.

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழு, 'கொமன்வெல்த்' அமைப்பின் உயர்நிலை மாநாட்டில் பங்குபற்றுவதற்காக சைப்பிரஸ் வந்திருக்கும் இவ்வேளையில் —

மாநாட்டுக்கு வந்திருக்கும் ஏனைய நாட்டுத் தலைவர்களிடம் மேற்கண்ட கோரிக்கையை 'அறிக்கை ஒன்றின் மூலம் விடுதலைப் புலிகள் விடுத்திருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் சர்வதேச செயலகம் இந்த அறிக்கையை அனுப்பி வைத்திருக்கிறது. அறிக்கையில் குறிப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

படையினரிடம் சிக்கிய 7 பேர் நேற்று விடுதலையாகி வந்தனர்

அவர்களில் ஒருவர் கிளாலியில் பிடிபட்டவர்

யாழ்ப்பாணம், ஒக். 23

பலாலி, இளவாலை, காங்கேசன்துறைப் பகுதிகளுக்குச் சென்றிருந்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகள் இருவரும் நேற்று யாழ் நகர் திரும்பினர். அவர்கள் வரும்போது படையினரிடம் சிக்கியிருந்த ஏழுபேரையும் அழைத்துவந்திருந்தனர்.

அவர்களில் அறுவர் மாதகல், இளவாலை, அளவெட்டிப் பகுதிகளைச் சேர்ந்த ஆயோதிபர்கள். மற்றையவர் 'யாழ் தேவி' இராணுவ நடவடிக்கையின்போது படையினரிடம் சிக்கியவர்.

செஞ்சிலுவை அதிகாரிகள் இந்த எழுவரையும் காங்கேசன்துறையில் இருந்து நேற்றுக் காலை 'வாதுவ' கப்பல் மூலம் அழைத்துவந்தனர்.

மாதகல், இளவாலை, அளவெட்டிப் பகுதிகளைச்சேர்ந்த விசுவர் முத்தையா (வயது78), அவர் மனைவி செல்லம்மா (வயது 68), பர்ணாந்து பிள்ளை மாக்கிரட் (வயது60), பழநி மகாதேவி (வயது 75), மிக்கல்பிள்ளை கிறிஸ்ரீனா (வயது 65), செபஸ்தியாம் பிள்ளை பர்னாந்து (வயது 81) ஆகியோரும். பலாலியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கிளாலியைச் சேர்ந்த சந்தியா

(6 ஆம் பக்கம் பார்க்க)

500 ஈழ அகதிகளை சுவிஸ் திருப்பி அனுப்பும்

யாழ்ப்பாணம், ஒக் 23

1991 ஆம் ஆண்டுக்குப் பின் சுவிட்ஸர்லாந்துக்குச் சென்ற ஈழத் தமிழ் அகதிகளில் ஐநூறு பேர் விரைவில் கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்படவிருக்கின்றனர்.

இவர்களை கொழும்பில் வைத்துப் பராமரிப்பதற்கு உதவுமாறு இலங்கை அரசு விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் எவையும் முன்வரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த இரு மாதங்களில் நூறு பேரும், எஞ்சிய 400 பேரும் அடுத்த வருட ஆரம்பத்திலும் கொழும்புக்கு அனுப்பப்படுவர்.

முதலில் கொழும்புக்கு அனுப்பப்படவிருக்கும் நூறு பேரின் விவரங்களை சுவிஸ்

(6 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாண நீதிமன்றம் இன்று திறப்பு

யாழ்ப்பாணம், ஒக். 23

தமிழீழ நீதி நிர்வாகத் துறையின் யாழ்ப்பாண நீதிமன்றம் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது. (உ-3)

கிளாலியில் அதிகாலை ஹெலி நோட்டம்

தென்மராட்சி, ஒக். 23

கிளாலிக் கடற்பகுதியை நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை வேளை 2 30 மணியளவில் ஹெலி ஒன்று பல தடவைகள் வட்டமிட்டு நோட்டம் பார்த்தது.

ஹெலி திரும்பிச் சென்ற பின்னர் ஞானிமடம் இறங்கு துறைப் பகுதியில் இருந்து கடற்பிராந்தியத்தை நோக்கி தொடர்ச்சியாக வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. காலை 5.30 மணியளவில் தாக்கதல் நடத்தப்பட்டது. (ஒ-117)

காஷ்மீர் பள்ளிவாசல் விவகாரம்:

மக்கள் கூட்டத்தின் மீது ராணுவம் சூடு; 20 பேர் பலி!

ஸ்ரீநகர், ஒக். 23

காஷ்மீரின் ஹஸ்ரத்பால் பள்ளிவாசலை கடந்த சில நாட்களாக சுற்றிவளைத்து நிற்கும் இராணுவத்தினரை விலகிச் செல்லுமாறு கோரி ஆர்ப்பாட்டம் செய்த ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டம் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இருபதுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கூடியிருந்த வேளையில் அவர்கள் மீது இராணுவத்தினர் சுட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் பெரும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

தமிழா !
உலகம் வியக்கும் தலைவனே
எமக்குப் படை நடத்துகின்றான்
பூவா தலையா போட்டுப் பார்க்காதே !
புறப்படு வெற்றி எங்கள் பக்கம் தான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரி

அருள்மிகு ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்

25 : 10 . 93 திங்கள் முதல் 27 : 10 : 93 புதன்வரை மகாநவசண்டி ஹோமம் நடைபெறும்.

ப. மகாகணபதிசர்மா.
(தர்மகர்த்தா)

(2-783)

அகில இலங்கை இளங் கலைஞர் மன்றம்

மாதாந்த இசை நிகழ்ச்சியும் வாணி விழாவும்

பூபாலசிங்கம் புத்தகசாலை

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஆதரவில்

இடம் : மன்றக் காலமண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர்.

காலம் : 24 — 10 — 1993 ஞாயிறு
மாலை 3 மணி

நிகழ்ச்சி நிரல்

மாலை 3.00 — 4.30 விஜயதசமி பூஜையும், ஆரம்ப நாள் வகுப்பும்

4.30 — 4.40 மிருதங்க இசை
வ. ஆனந்தராஜித்தன், இ. பரதன், சி. கஜன், க. யுகன்

4.40 - 5 00 வீணை இசை
சரோஜினி சுப்பிரமணியம்,
சிவஸ்ரீ ஜெகதீஸ்வரக்குருக்கள்,
சித்தியாலக்ஷ்மி சிவகுமாரசர்மா,
ப. ரதிரூபன் — மிருதங்கம்

5 00 — 5.10 மிருதங்க இசை
இ. குகன், நா. கஜீவன், ஜே. சஞ்சீர்,
சி. சிவகரன், ச. சுதர்சனமோகன், ந. சிவசங்கர்

5 10 — 5 30 வாத்திய மிருந்தா
திருமதி சந்திரலேகாவதி ஜெயக்குமாரனின் மாணவிகள்

5 30 — 5.50 பாட்டு
லக்ஷ்மிலக்ஷ்மி இராஜசாமி
லொயிஸ் கனிஷ்யா சூசைப்பிள்ளை,
சரோஜினி சுப்பிரமணியம்,
கமலாஜோதி S. ஸ்ரீதேவிதடாராஜசர்மா,
நேமலதா குமாரசாமி

வயலின் — T. நேமுசா
மிருதங்கம் — P. ரதிரூபன்

5.50 — 6.50 புல்லாங்குழல் இசை
டாக்டர் கி. வெங்கதரன்
வயலின் — திரு. வி. கே. குமாரசாமி
மிருதங்கம் — திரு எஸ். மகேந்திரன்

6.50 — 7 10 மங்கள விளக்கேற்றல்
திரு. இராஜன் பூபாலசிங்கம் வரவேற்புரை,
(பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்.)
திரு. எஸ். கி. சிவகுருநாதன், வாழ்த்துரை,
(வி. எம். எஸ். நிறுவனம், யாழ்.)
தலைமையுரை: பிரம்மஶ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள் அவர்கள்
(பிரதமகுரு, நல்லூர் முருகன் தேவஸ்தானம்)
பிரதம விருந்தினர் உரை:
பேராசிரியர் என். நாகலிங்கம் அவர்கள்
(தலைவர், பொருளியற்துறை
யாழ். பல்கலைக்கழகம்)

7 10 — 8.10 பாட்டு
திருமதி ஹேமாவதி கபிலதாஸ்
வயலின்: திரு. ஆர். எஸ். சேவமூர்த்தி
மிருதங்கம்: திரு. கே. கணேசலிங்கம்
தபேலா: பி. ரதிரூபன்

8.10 — 9.10 சிறப்பு நிகழ்ச்சி
பரதநாட்டியம்
இளங் கலைஞர் மன்ற மாணவிகள்
நட்டுவாங்கம் நாட்டியவிஷாரத,
வித்வான்மணி சரவணமுத்து
பாடல்: சாரதா சச்சிதானந்தம்
வயலின்: திரு. ஆர். எஸ். சேவமூர்த்தி
மிருதங்கம்: திரு. எஸ். மகேந்திரன்
புல்லாங்குழல்: தாணுநாதசர்மா

இசை ஆர்வலர்கள் அபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

விஜயதசமி பூஜையும், நாள் வகுப்பும்
24 — 10 — 93
ஞாயிறு மாலை 3.00—4.00 மணி வரை நாள்வகுப்புகள் ஆரம்பித்து வைக்கப்பெறும்.
ஒவ்வொரு சனி ஞாயிறு நாட்களில் காலை 8.00 — 12.00 மணி வரை

சிறந்த இசைக்கலைஞர்களால்
வாய்ப்பாட்டு, வயலின், வீணை, மிருதங்கம், பரதநாட்டியம் என்பன பயிற்றுவிக்கப்பெறும்.

-மேற்படி மன்றத்தினர்

(87750)

நாளை

யாழ்ப்பாணம், ஒக். 28 வண்ண நாவலர் மகாவித்தியாலயத்தில் இலவச பண்ணிசை வகுப்புக்கள் விஜயதசமி தினமான நாளை காலை 9 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஸ்ரீலஶ்ரீ ஆறுமுகநாவலர் தர்மகர்த்தா சபையினரால் நடத்தப்படவுள்ள இந்த வகுப்புக்களில் பங்குபற்ற விரும்புவோர் பாடசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(த-5)

o o o

நீராவியடித் தொழுப்பு மாணிக்கப் பிள்ளையார் ஆலயப் பண்ணிசை வகுப்பின் ஒராண்டு நிறைவு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் திருமுறை மன்றப் பேரசான் திரு.வை. கு. கிருஷ்ணபரட்டியம் தலைமையில் கலைத்திக் நடைபெறும்.

(உ)

o o o

தென்மராட்சி, ஒக். 2[illegible] மிருகலில் படித்த மகளிர் நிட்டத்தில் வசை அமிர்தலிங்கம் சபையினால் நடத்தப்பட்ட பல்வேறு வேலை பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட யுவதிகளுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் பணம் பொருள் உற்பத்திப் பொருட்காட்சியும் நாளை ஞாயிறு காலை 9.00மணிக்குமிருகலில் படித்த மகளிர் நிலை மாதர் சங்க அமிர்தலிங்கம் சபை மண்டபத்தில் நடைபெறும்.

இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட பிரதி அரசாங்க அதிபர் திரு. அ. வைத்திலிங்கமும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலாளர் பு. சுந்தரம்பிள்ளையும் கலந்து கொள்வர்.

(ஒ-117

இன்று

யாழ்ப்பாணம், ஒக். 23 செஞ்சிலுவைச் சங்க யாழ் மாவட்ட தொண்டர் சேவைக் குழுத்தலைவரும், செஞ்சிலுவைச் சங்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு அங்கத்தவரைப் பற்றிய கருத்தரங்கும் இன்று முற்பகல் 10.00 மணிக்கு சோப் பார்க் பிரிவு காரியாலயத்தில் நடைபெறும்.

(ஒ)

வாதுவவில் சைக்கிள்கள்

யாழ்ப்பாணம், ஒக். 23 பருத்தித்துறைக்கு வந்த தனியார் கப்பலில் சுமார் ஆயிரம் சைக்கிள்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

ப. நோ. கூ. சங்கம் மற்றும் தனியார் வர்த்தகர்களால் இந்த சைக்கிள்கள் இக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

(இ-5-17)

யாழ்ப்பாண மாநகர சபை

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

விசேட அறிவித்தல்

22 - 10 - 93 ஆம் திகதி நல்லூர் கோவில் வீதியில் ஆரம்பிக்கப்படவுள்ள புதிய நூல்வில் எல்லைக்குள் அனைவரும் வேண்டுகோளுக்கிணங்க எதிர்வரும் 24 - 10 - 93 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 5 00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பிரதம நூலகர்
மாநகர ஆணையாளருக்காக,
யாழ்ப்பாணம்.

மாநகர சபுவலகம்,
யாழ்ப்பாணம். 22 - 10 - 1993.

(இ 6268)

---

5 ஆம் ஆண்டு நீங்காத நினைவுகள்



தாயின் வயதில்		அரியாத அமிழ்வில்
12		18
—		—
10		10
—		—
1945		1988

திதி. 23 — 10 — 1993

அமரர்

சின்னத்துரை சற்குணராஜா

(உரிமையாளர், ராஜன்ஸ் கூல் பார் & கபே சந்தையடி மானிப்பாய்)

ஐந்தாண்டுகள் ஆனாலும் எம் இதயத்தை விட்டு நீங்காத உங்கள் நினைவுகளுடன் என்றும் வாழ்ந்து கொண்டிருப்போம்.

உங்கள் பிரிவால் தவிக்கும்:

மனைவி, பிள்ளைகள், உறவினர்கள்.

சந்தையடி, மானிப்பாய். (6555)

செஞ்சிலுவைச் சங்க கொடி வாரம் 1993

ஒக்டோபர் 25 — 31 வரை

"மக்கள் சேவையே மகேசன் சேவை"

HUMANITY IS GREAT

DIGNITY FOR ALL

"வலை கொடுத்து வழி சமைத்து
வாழ வழி காட்டி நின்றாய்
வையத்தில் வாழ வழி வகுப்பது
செஞ்சிலுவைச் சங்கமன்றே"

BLESSED ARE THOSE WHO GIVE

வாரி வழங்குங்கள்
நம் மக்கள் நல் வாழ்வுக்காக

எமது தொண்டர் உங்களிடம் வருவர் — இயலுமானளவு அளியுங்கள் செஞ்சிலுவைச் சங்கப் பிரிவுகள் வாழ். பிரதேச ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் இயங்குகின்றன.

இ. செ. சி. ச. யாழ். கிளையின் பிரிவுகள்:-

தெடுத்தீவு ஊர்காவற்றுறை வேலணை	சங்கானை சண்டிலிப்பாய் தெல்லிப்பளை	உடுவில் நல்லூர் யாழ்ப்பாணம்
காலக்கேரி கோப்பாய் மானிப்பாய்	பருத்தித்துறை மருதங்கேணி பலை (விஸ்நோசரி இலை)	தலைமையகம்: 78, கஸ்தூரி வீதி யாழ்ப்பாணம்

(இ-6267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு

1992/93 கல்வி ஆண்டுக்கான வயது முதிர்ந்த அபேட்சகர்கள்/கண்பார்வை யற்ற அபேட்சகர்கள்/படிப்பு தவிர்ந்த பிற துறைகளில் திறமை வாய்ந்த அபேட்சகர்கள்/வலது குறைந்த அபேட்சகர்கள் / முதற்பட்டங்கள் படிக்க விரும்பும் பட்டதாரிகள் ஆகியோருக்கான

அனுமதி

1992/93 கல்வி ஆண்டில் பல்கலைக்கழகங்களில் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான இடங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை ஏற்கனவே மாணவர்களிடமிருந்து பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு பெற்றுக் கொண்டுள்ளது.

ஒவ்வொரு விண்ணப்பமும் இதன் இறுதியில் காணப்படும் மாதிரிப் படிவத்தில்படி தயாரிக்கப்பட்டு 1993 ஒக்டோபர் 31ஆம் திகதியோ அதற்கு முன்னரோ செயலாளர், பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு இல. 20, உவர்மலை இடம், கொழும்பு 07 என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க கீழ் மூலையில் "விசேட ஏற்பாட்டின் கீழ் அனுமதி" என்ற சொற்கள் குறிப்பிடப் படல் வேண்டும்.

(அ) *வயது முதிர்ந்த அபேட்சகர்கள்*

அனுமதிக்குப் பரிசிலிப்பதற்கு ஒரு வயது முதிர்ந்த அபேட்சகர் 1991 ஆகஸ்டில் (முழுமையான) அதன்பின் 1993 ஏப்ரலில் (விசேட) நடத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆகக் குறைந்த தேவைகளைத் திருப்தி செய்திருத்தல் வேண்டும். அனுமதி கலை, வணிகவியல், உயிரியல் விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம் ஆகிய கற்கை நெறிகளுக்கு மட்டுமே பரிசிலிக்கப்படும். 1993 - 10 - 31 ஆம் திகதி அன்று 25 வயதினை எய்திய அபேட்சகர் மட்டுமே விண்ணப்பிக்க உரித்துடையவராவர்.

(ஆ) *பார்வையற்ற மற்றும் வலது குறைந்த அபேட்சகர்கள்*

(i) 1991 ஆகஸ்டில் (முழுமையான) அதன்பின் 1993 ஏப்ரலில் (விசேட) நடத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பிறெய்ல் (Braille) முறையில் பரீட்சை எழுதி அனுமதிக்குரிய ஆகக் குறைந்த தேவைகளைத் திருப்திப்படுத்திய பார்வை யற்ற அபேட்சகர் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுடையவராவர். இக் அபேட்சகர் கலை, சட்டம் ஆகிய கற்கை நெறிகளுக்கு அனுமதிக்கப்பட மட்டுமே பரிசிலிக்கப்படுவர்.

(ii) வலது குறைந்த அபேட்சகர் அனுமதி விடயத்தில் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் உதவிகள் வழங்கப் படுகின்றன. அபேட்சகரின் சொந்தத் தேவைகளைக் கொண்டே ஒவ்வொரு விண்ணப்பமும் பரிசிலிக்கப்படும். எக்காரணம் கொண்டும் அனுமதிக்குப் பரிசிலிக்கப்பட அபேட்சகர் 1991 ஆகஸ்டில் (முழுமையான) அதன்பின் 1993 ஏப்பிரலில் (விசேட) நடத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஆகக் குறைந்த தேவைகளைத் திருப்தி செய்திருத்தல் வேண்டும்.

(இ) *படிப்புத் தவிர்ந்த பிற துறைகளில் திறமை வாய்ந்த அபேட்சகர்கள்*

தேசிய / சர்வதேச மட்டத்தில் விளையாட்டு, கலை, சங்கீதம், நாடகம் ஆகியவற்றில் 1987 ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னும் தெரிவுப் பெற்ற அபேட்சகர் மட்டுமே இதற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவராவார். இந்த ஏற்பாட்டின் கீழ் அனுமதிக்குத் தகுதியுடைய அபேட்சகர் 1991 ஆகஸ்டில் (முழுமையான) அதன்பின் 1993 ஏப்ரலில் (விசேட) நடத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆகக் குறைந்த தகைமைகளைத் திருப்தி செய்திருத்தல் வேண்டும்.

அனுமதிக்குரிய ஆகக் குறைந்த தகைமைகள் பின்வருமாறு:

அனுமதிக்கு தகுதியுடைய ஒரு அபேட்சகர்.

1. (அ) ஒரே அமர்வில் க. பொ. த. (உ. த.)ப் பரீட்சையில் அறிவிக்கப்பட்ட 4 பாடங்களில் சித்தி;

அல்லது

(ஆ) க. பொ. த. (உ த.)ப் பரீட்சையில் ஒரே அமர்வில் அறிவிக்கப்பட்ட 3 பாடங்களில் சித்தியுடன் அதே அமர்வில் 4வது ஆக தெரிவிக்கப்பட்ட பாடத்தில் S திற்குக் குறையாத புள்ளியைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

2. 4 பாடங்களுக்கும் 180 திற்குக் குறையாத பெறுபேறு/ நிரற்படுப் புள்ளியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

1992/93 கல்வி ஆண்டுக்காக வயதுமுதிர்ந்த அபேட்சகர்கள்/ கண்பார்வையற்ற அபேட்சகர்கள் / படிப்பு தவிர்ந்த பிற துறைகளில் திறமை வாய்ந்த அபேட்சகர்கள் / முதற்பட்டங்கள் படிக்க விரும்பும் பட்டதாரிகள் ஆகியோருக்கான அனுமதி

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர்: .....
2. முகவரி: .....
3. (i) பிறந்த திகதி: .....
   ii) 1993-10-31ஆந் திகதி வயது:
   வருடம்: ..... மாதம்: ..... நாள்: .....
4. 1991ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சை பெறுபேறுகள்: .....
   (1991 ஆகஸ்டில் (முழுமையான) பரீட்சை அதன்பின் 1993 ஏப்ரல் (விசேட) பரீட்சை)

சமிலக்கம் | | நிருவாக மாவட்டம் | |

மொத்தப் நிரற்படுப் புள்ளி |

பாடங்கள்	தரம்
.....	.....
.....	.....
.....	.....
.....	.....

5. நீர் 1992/93 கல்வி ஆண்டு பல்கலைக்கழக அனுமதிக்கு வேறானும் பெறு பேற்றில் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ளீரா? .....
   தெரிவு செய்யப்பட்டுள்ளீராயின் விவரங்களைத் தருக.
   கற்கை நெறி: .....
   பல்கலைக்கழகம்: .....
6. விண்ணப்பத்திற்கான விசேட காரணம் / காரணங்கள் .....
   .....
   (கற்கை நெறி ஆரம்ப ஒன்பது துறைகளில் திறமை கொண்டவர்கள் விண்ணப் பிப்பதுடன் தம் சாதனைகளையும் எவ்வாண்டுகளில் அதனைப் பெற்றார் எனவும் குறிப்பிடல் வேண்டும்).
7. பரிசிலிக்கப்படல் நீர் விரும்பும் கற்கை நெறியும் / கற்கை நெறிகளும் பல்கலைக் கழகமும்/ பல்கலைக்கழகங்களும்.
   (பரிசிலிக்கப்பட வேண்டிய கற்கை நெறியும் / கற்கை நெறிகளையும், பல்கலைக் கழகத்தையும் / பல்கலைக்கழகங்களையும் நீர் விரும்பும் விருப்ப ஒழுங்கில் குறிப்பிடவும். விண்ணப்பித்த பின் மாணவர் எதனை விருப்ப ஒழுங்கை மாற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்)

கற்கை நெறி	பல்கலைக்கழகம்
.....	.....
.....	.....
.....	.....
.....	.....

8. நீர் எப்போதாவது உங்கள் மாணவராக ஏதேனும் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்து கொண்டீரா? பதிவு செய்து கொண்டீராயின் அதன் விவரங்களைத் தருக.
   .....
9. நீர் "பட்டதாரிகளுக்கான விசேட அனுமதியின் கீழ் விண்ணப்பிப்பதாயின் பல்கலைக்கழகமும் பெற்றபடலும் குறிப்பிடப்படல் வேண்டும். (உறுதிப் படுத்தப்பட்ட பட்டச் சான்றிதழின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்)

   பட்டம்: .....
   பல்கலைக்கழகம்: .....
   பட்டம் வழங்கப்பட்ட திகதி: .....

மேற்குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையானவையென்றும் செம்மையானவை என்றும் உறுதிப்படுத்துகிறேன். நான் க. பொ. த. (உ. த.) பரீட்சைக்கு இவ்வது முறைக்கு மேல் தோற்றவில்லை என்றும் இதனால் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி: ....

விண்ணப்பதாரியின் கையொப்பம்

(இ-6168)

(ஈ) *பட்டதாரிகள்*

அறிவிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் 1ஆம் வகுப்பு அதன்பின் 2ஆம் வகுப்பு (மேற்றர) பட்டத்தை முதற்பட்ட மட்டத்தில் பெற்றுக்கொண்ட பட்டதாரி களாவர். 1993 - 10 - 01 ஆம் திகதியன்று 30 வயதிற்குள் குறைந்தவராகவும் இருப்பவர்கள் விண்ணப்பிக்கலாம். முன்னரே தோற்றிய ஒரு மாதிரிப் பரீட்சையில் அதன்பின் முதற் பட்டத் தேர்வில் பெறுபேற்றை செம்மை செய்வதன் நோக்குடன் கற்கைப் பயிற்சி நெறியொன்றினை மீண்டும் செய்ய படாதாரிகள் எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள். மருத்துவம், பொறியியல் ஆகிய துறைகளில் பல்கலைக்கழகங்களில் பெற்றிடங்கள் இருந்தால் மட்டுமே அதற்கப் பாடநெறிகளில் அனுமதிக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

அவ்வாறு அனுமதிக்கப்படும் பட்டதாரிகள் அனைவரும் விதித்தவாறுப்படட கற்கைக் கட்டணங்களையும், தேர்வுக் கட்டணங்களையும் செலுத்துதல் வேண்டும்.

பட்டச் சான்றிதழின் பிரதியொன்றை தவறாது விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்

செயலாளர்,
பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு.

இல. 20,
உவர்மலை இடம், கொழும்பு - 07
01 - 10 - 1993

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையில் உள்ள பெண்கள் பாவிக்கும் ஜப்பான் லுமாலா சைக்கிள் விற்பனைக்குண்டு தொடர்பு: சி. நாதன், இல. 16/3, விதானையார் வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். (6549)

தேவை

நல்ல நிலையில் உள்ள சாளி மோட்டார் சைக்கிள், விற்பனைக்கு இருந்தால் கீழ் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு உடன் தொடர்பு கொள்ளவும். 52/7, காளி கோவிலடி கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். மே/பா 20, உதயன் சேவை நிலையம், 82, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (6698)

இம்மாதம் சுன்னாகத்தில் ஆரம்பிக்கப்படும் குளிர்பான சாலைக்கு விண்ணப்பித்திருந்த, விண்ணப்பிக்காத (ஆண்கள் மட்டும்) கணக்காளர், பில் எழுதுபவர், பரிமாறுவோர், சமையல் அனுபவசாலிகள் பதவிகளுக்கு 24-10-93 ஞாயிறு காலை 8-00—9-00 வரை நேரில் சமூகம் தரவும். நியூ கித்திரகலா ஸ்ரூடியோ, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (27708)

மணமகன் தேவை

இந்து 36 வயது, (2 இல் செவ்வாய் அவிட்டம்) மாதம் 3000/-க்கு மேல் வருமான முடைய உத்தியோகம் பார்க்கும் அழகிய மணப்பெண்ணுக்கு படித்த குடும்பத்திலுள்ள மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம். (27753)

தவறிவிட்டது

20 - 10 - 93 காலை கிளாலியில் இருந்து வரும் வழியில் புகைப்படங்கள், பெறுமதியான உடுப்புகள் அடங்கிய பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். மாகோ களஞ்சியம். சுவையருவி அருகில் மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (27754)

வகுப்புகள்

ஆண்டு 8 முதல் 11 வரையான மாணவர்களுக்கான வர்த்தகம், தமிழ் வகுப்புக்கள் 28ஆம் திகதி ஆரம்பமாகிறது. ஆசிரியர்: V. N. மோகன். தொடர்பு: S. சதீஷன், 109/2, சட்டநாதர் வீதி, நல்லூர். (27740)

G. C. E. (A/L) - 94

மேற்படி G.C.E. (A/L) 94 வகுப்பிற்கான கலை, வர்த்தக 93ஆம் ஆண்டு புள்ளி வழங்கல் திட்டம் விற்பனையாகிறது. அறிவகம் புத்தகசாலை, வெலிங்டன் சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம். (சி 6427)

ஜீவாகாரம்

வளரும் குழந்தைகள் முதல் தாய்மையுறும் தாய்மார்கள் அனைவருக்கும் முழுநிறைவான சமவிகித போஷாக்குணவு - ஜீவாகாரம். கிடைக்குமிடம் அண்ணா கோப்பிக்கடை யாழ்ப்பாணம், திருநெல்வேலி, இணுவில். (சி/6426)

மிருதங்கம்

இரண்டு நாட்களுக்குள் தோல் வாத்தியங்கள் வாவும் சுத்தமாகச் சாதம் போட்டு தரப்படும், கோவிந்தபிள்ளை விஜயகுமார் இல. 192/1 நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (27710)

வாடகைக்கு

12 பரப்பு தோட்டக் காணி சகல வசதியுடன் வீடு, இருபது தென்னை மரங்கள், மா, மாதுளை பிரயோசனங்களுடன் ஒற்றிமுறையில் ஐந்து வருடங்களுக்கு கொடுக்கப்படும். எஸ். கனகரட்னம், சி. சி. பாடசாலைக்கு அருகில் நீர்வேலி. (27734)

வீட்டுத்தோட்டப் போட்டி

போட்டியில் வெற்றி ஈட்டச் "சக்தி" இயற்கைப்பசளை. கூட்டெரு முறையில் தயாரித்தது. மண்வளம் பெருக்கி விளைச்சலை அதிகரிக்கிறது. பக்கற் ஒன்று விலை ரூ 9/- 25 பக்கெற் கொண்ட பெட்டி ஒன்று ரூபா 200/- மட்டுமே. அண்ணாகோப்பிக்கடைகளிலும் விற்பனையாகிறது. 'மில்க்வைற்' (சி-6260)

திருத்தவேலைகளுக்கு

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்கள் அனைத்தும் நிபுணர்களால் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். டிக்கா றேடியோ அன்ட் வோச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் அருகில்) யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-6176)

சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவசாயம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? கேட்டுப் பாருங்கள்! ஜாதகம், கைரேகை, எண்விஞ்ஞானம், சாமுத்திரிகா லட்சணம் அனைத்துக்கும் தொடர்பு: த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (முடமாவடிச் சந்தி) (27727)

SPOKEN ENGLISH

Spoken English with Grammar and Literature, Commencing 25-10-93 Monday at 6-00 a. m., 7-00 a. m. V. N. Kandasamy (Cosultant English Studies) 87, திருநெல்வேலி றோட், (ரயில் கடவைக்கு அண்மையில்) கொக்குவில். (6551)

சர்வதேச ஆசிரியர் தினம்

சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் சர்வதேச ஆசிரியர் தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அதிபர் ம. சபாரட்ணம், பாடசாலை அபிவிருத்திச் செயலாளர் த. சபாநாயகம், பழைய மாணவர் சங்க செயலாளர் வே. பாக்கியநாதன் உட்பட பலர் உரையாற்றினர். (க-30)

பாடசாலை அனுமதி 1994

நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை

கைதடி.

மேற்படி பாடசாலையில் 1994 ஆம் ஆண்டு அனுமதி கோர விரும்புவோர் பாடசாலை அலுவலகத்தில் ரூபா 10/- செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்று 30 - 11 - 1993 க்கு முன் விண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

★ செவிப்புலன் விழிப்புலன் இழந்த பாடசாலை அனுமதி வயதெல்லைக் குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் அனுமதி கோர உரித்துடையவர்.

★ கல்வி, விடுதி வசதி, உணவு யாவும் இலவசம்.

★ நன்கொடைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலும் விவரங்கள் வேண்டின் தொடர்பு கொள்ளவும்.

— அதிபர்.

(சி-6222)

ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு	உதிர்வு
22	31
—	—
04	10
—	—
1922	1992

அமரர்

கணபதிப்பிள்ளை சரவணமுத்து

திதி: 23 — 10 — 1993

எமது அன்பிற்குரிய தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும், உங்கள் நினைவு எம்மைவிட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்,
31/1, சிலப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை. (27749)

ஜெயந்தி தின விழா



ஸ்ரீ முருகன் அருள் மார்க்கண்டு சுவாமிகளின் 66 ஆவது ஜெயந்தி தின விழாவான நாளை 24-10-1993 சுவாமிகளின் அருளும், ஆசியும் பெற்றிருக்கும் முருகன் அடியார்கள் வெகு சிறப்பாக இவ்விழாவினை, மானிப்பாய் முருகன் அருள் நிலையத்தில் கொண்டாடுகிறார்கள்.

— முருகன் அடியார்கள்

(6545)

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவு சங்கம் (வரைவுள்ளது)
பி. எஸ். சேவிஸ் நிலையம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

முக்கிய அறிவித்தல்

விசேட பொதுக் கூட்டம்- 06-11-93

கிளைக் குழுத் தேர்தலுக்குப் பின்னர் நடைபெறும்

முதலாவது பொதுச்சபைக் கூட்டம்

மேற்படி கூட்டம் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் (பி. எஸ். சேவிஸ் நிலையம், யாழ்ப்பாணம்) 06 - 11 - 93 சனிக்கிழமை மு. ப. 10 - 00 மணிக்கு சங்கத் தலைவர் திரு. தி. சுந்தரலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெறும். பொதுச்சபைப் பிரதிநிதிகளால் தரப்பட்ட முகவரிக்கு நிகழ்ச்சிநிரல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது நிகழ்ச்சிநிரல் கிடைக்கப்பெறாத பொதுச்சபைப் பிரதிநிதிகள் மேற்குறிப்பிட்ட முகவரியில் உள்ள சங்கத் தலைமைக்காரியாலயத்தில் சங்க செயலாளருடன் தொடர்பு கொண்டு நிகழ்ச்சிநிரலைப் பெற்றுக் கொள்ளவும்.

செயலாளர்.
ஊர்காவற்றுறை ப. நோ. கூ. ச.

(சி/6431)

கண்ணீர் அஞ்சலி

திருமதி வரதலஷ்மி அருளானந்தம்

(ஆசிரியை, உப தலைவர், ஆசிரிய நலன்புரிச் சங்கம், யா/வைத்தீஸ்வரக் கல்லூரி)

யா/வைத்தீஸ்வரக் கல்லூரி ஆசிரியை திருமதி வரதலஷ்மி அருளானந்தம் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு, யா/வைத்தீஸ்வரக் கல்லூரி ஆசிரிய நலன்புரிச்சங்க அங்கத்தினர் அதிர்ச்சியும் ஆழ்ந்த துயரும் கொண்டுள்ளனர். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினரினதும் மாணவ சமுதாயத்தினதும், உற்றார் உறவினர்களினதும் துயரத்தில் நாமும் பங்கு கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து, கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறோம்.

ஆசிரிய நலன்புரிச் சங்கம்.
வைத்தீஸ்வரக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(27752)

எமது ஒறிஜினல் வெளியீடுகள்

1. ஜென்டில் மேன்
2. தாலாட்டு
3. ஆத்மா
4. கோகுலம்
5. ராஜதுரை
6. சிவராத்திரி
7. மூன்றாவது கண்

என்றும் தரமான பிரதிகளுக்கு,

'வீடியோ விமல்'
117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.

(27755)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

தன்னைத்தானே ஏமாற்றலாமா?

ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அனுருத்த ரத்வத்த சபையில் கேட்ட கேள்வி ஒன்று எல்லோரது கவனத்தையும் ஈர்ப்பதாகும்.

வடக்கே பொருள்களை எடுத்துச் செல்வதற்கு இராணுவம் அனுமதியளிக்கிறது. அவை கிளிநொச்சிக்கு அப்பால் கிளாலியூடாகவே எடுத்துச் செல்லப்படுகின்றன. ஆயின், கிளாலிப் பாதையைப் பயன்படுத்துவதற்கு இராணுவம் எதிர்ப்பது ஏன்?

கேட்டவருடைய நோக்கம் என்ன, எதற்காகக் கேட்டார் என்பவை ஒரு புறம். தர்க்க ரீதியாக இக்கேள்வி அர்த்தம் உள்ள ஒன்று.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கான சிங்கள அரசின் பிரதான வழிமுறைகளில் பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை ஆகியன இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பிடித்துள்ளன. எனினும் தமிழர்களும் சிங்கள அரசின் பிரஜைகளே, அவர்களுக்கான வசதிகளை குறையின்றி வழங்குகிறோம் என்று சர்வதேச உலகத்துக்குக் காட்டுவதற்காகச் சில பொருள்களை இங்கே கொண்டு வருவதற்கு அரசு அனுமதிக்கிறது.

கொழும்பில் பாதுகாப்பு அமைச்சில் உத்தரவுச் சீட்டுப் பெற்ற பின்னரே பொருள்களை யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கென வவுனியா வரை எடுத்து வரலாம். வவுனியாவில் இராணுவத்தினர் அனுமதித்தாலே யாழ்ப்பாணம் நோக்கி அவற்றை எடுத்து வரலாம். யாழ்ப்பாணத்துக்கு வருவதற்கு உள்ள ஒரே பாதை கிளாலியே.

கொழும்பிலும், வவுனியாவிலும் அனுமதித்த பொருள்களை கிளாலியால் கொண்டு போகக் கூடாது என்று தடுத்தால் அதன் அர்த்தம் என்ன? யாழ்ப்பாணத்து மக்கள் கொழும்பில் அனுமதி பெற்று விலைகொடுத்து வாங்கிய பொருள்களுடன் கிளிநொச்சியில் தங்கிவிட வேண்டும் என்பதா? இடதுகையால் கொடுத்து வலதுகையால் பறிக்கும் அபத்தமல்லவா இது? இந்த முழுக் கதையுமே உலகத்தை ஏமாற்றும் வித்தையே!

மேலும் கிளாலிப் பகுதியை கைப்பற்றி அதனூடாக நடக்கும் பொதுமக்கள் பயணத்தைத் தடுத்துவிட இராணுவமும் அரசும் எடுத்த முயற்சியும் தோல்வி கண்டுவிட்டது. இதன் பின்னரும் கிளாலிக் கடற்பிராந்தியத்தைப் போக்குவரத்துத் தடைப் பகுதியாக வைத்திருப்பதன் நோக்கம் என்ன?

கிளாலியைப் பிடித்து, யாழ்ப்பாண மக்களின் கடற்பயணத்தைத் தடுத்து, அவர்களைக் குடாநாட்டிற்குள் சிறை வைத்துப் பலவீனப்படுத்த வேண்டும் என்பது தான் 'யாழ்தேவி' நடவடிக்கையின் நோக்கமும் இலக்குமாக இருந்தது. அது தோல்வி அடைந்து போகவே, இராணுவத் தளபதி 'யாழ்தேவி'யின் இலக்கு வேறு ஏதேதோவாக இருந்ததாகப் போர்வை போட்டு தோல்வியை மறைக்கப் பார்க்கிறார்!

அரசுக்கும், இராணுவத்துக்கும் கனவான் தனம் இருக்குமானால் தமது தோல்வியை ஒப்புக் கொண்டு, மீண்டும் கிளாலியூடாகப் பயணச்சேவை நடப்பதனை கண்டு கொண்டு, கிளாலிக் கடற்பகுதி மீதான தடையை நீக்க வேண்டும். திரு. ரத்வத்தையின் கேள்வியின் அர்த்தமும் அதுவே! அரசு இருட்டில் இருந்து வெளியே வருமா? உலகத்தை ஏமாற்றுவது ஒரு புறமிருக்க தன்னைத் தானே எத்தனை நாட்களுக்கு ஏமாற்றப் போகிறது?

புகைப்படக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 23

தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றுச் சம்பவங்களை சித்திரிக்கும் மாபெரும் புகைப்படக் கண்காட்சி ஒன்று இன்றும் நாளையும் யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பின் யாழ் கோட்டப் பொறுப்பாளர் திரு வை. செல்வம் தலைமை வகிப்பார். கல்வி மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் கண்காட்சியைத் திறந்து வைப்பார்.

இன்றும் நாளையும் காலை 9 மணியில் இருந்து இரவு 9 மணி வரையும், — கண்காட்சியைப் பார்வையிடலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாட்களும் இரவு 7 மணிக்கு தாயகக் கனவு, போரம்மா, ஒலிவீச்சு ஆகிய ஒளிப்படக்காட்சிகளும் காண்பிக்கப்படும் என்றும் வி.பு.மா அமைப்பு அறிவித்துள்ளது.

விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு விழாவை ஒட்டி நடத்தப்பட்டு வரும் பூப்பந்துச் சுற்றுப் போட்டியில் மாணவிகளுக்கான ஆட்டங்கள் இன்று காலை 8 மணி தொடக்கம் யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

ஓ ஓ ஓ

யாழ். ஜொனியன்ஸ் கழகம் யாழ் மாவட்ட கழக அணிகளுக்கிடையில் நடத்தும் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிக்கான அணி ஒழுங்குத் தெரிவு இன்று மாலை 4 மணிக்கு சென் ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் இடம் பெறும்.

கழக அணிகள் இன்று நண்பகல் 12 மணி வரை விண்ணப்பப் படிவங்களை ஒப்படைக்கலாம் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஓ ஓ ஓ

புதிய மத்தியஸ்தர்களைத் தெரிவு செய்வதற்கான பரீட்சைகளை யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் எதிர் வரும் 31 ஆம் திகதி நடத்த இருக்கிறது.

இப்பரீட்சைக்கு தோற்ற விரும்புவர்களை நாளை காலை 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் கூடுமாறு கேட்கப்பட்டிருக்கிறது. (உ-20)

ஓ ஓ ஓ

வலிகாமம் மேற்கு உதைபந்தாட்டச் சங்கத்தில் பதிவு செய்த கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்கு கொள்ளும் அணிகள் வருமாறு:-

★ 2.00 மணி:- வளர்மதி அணி எதிர் அம்மான் அணி

★ 3.00 மணி:- ஞானகுருகன் அணி எதிர் வளர்பிறை அணி

★ 4.00 மணி:- இந்து அணி எதிர் அண்ணா அணி

மேலும் ஒரு தொகுதியினருக்கு

ஒப்பந்த அடிப்படையில் ஆங்கில ஆசிரியர் நியமனம்

யாழ்ப்பாணம், ஒக் 23

யாழ். மாவட்டத்தில் ஒப்பந்த அடிப்படையில் மேலும் ஒரு தொகுதி ஆங்கில ஆசிரியர்கள் நியமனம் பெறவிருக்கின்றனர்.

ஓய்வு பெற்ற அரச ஊழியர்கள் மற்றும் ஆசிரியர் தற்சமயம் ஒப்பந்த அடிப்படையில் ஆங்கில ஆசிரியர்களாக பணியாற்றி வருவது தெரிந்ததே,

மேலும் ஒரு தொகுதி ஆங்கில ஆசிரியர்களை நியமிக்க கல்விச் சேவைகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளதாகவும் —

விரைவில் இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படவிருப்பதாகவும் — பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு துரை தியாகராஜா தெரிவித்தார்.

தற்சமயம் சுமார் 500 பேர் யாழ். மாவட்டத்தில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றுகிறார்கள். (க-3)

வட-கிழக்குக்கு 107 ஏ.எஸ்.பிமார்!

யாழ்ப்பாணம், ஒக், 23

வடக்கு - கிழக்கு பகுதிகளுக்கு 107 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் அரசினால் அனுப்பப்படவிருக்கின்றனர்.

இவர்கள் வடக்கு - கிழக்கு பகுதிகளில் — இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் — பாதுகாப்பு நடவடிக்கைகளை கவனிப்பர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை — 18 சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் பிரதி பொலீஸ் மா அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-8)

பால்மா'ரின்' உடைக்கும் நடவடிக்கை நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஒக். 23

வடபகுதிக்கு கப்பல் மூலம் எடுத்து வரப்படும் பால்மா 'ரின்'களை கடற்படையினர் உடைத்து சோதனையிடும் நடைமுறை நிறுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவித்தன.

கொழும்புத் துறைமுகத்தில் வைத்து கப்பல்களில் ஏற்றுவதற்கு முன்னர் பால்மா'ரின்'களை கடற்படையினர் சோதனை செய்து வந்தனர் என்பது தெரிந்ததே.

சுகாதாரத்திற்கு கேடான இந்த நடைமுறையை நிறுத்த வேண்டும் என்று யாழ். அரச அதிபர் கொழும்பில் உயர் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டதை அடுத்தே இந்த நடைமுறை நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-8)

தொண்டையில் மீன் முள்ளு சிக்கி ஆசிரியை மரணம்!

யாழ்ப்பாணம், ஒக். 23

சாப்பிடும் போது தொண்டையில் மீன் முள்ளு சிக்கியதால் ஆசிரியை ஒருவர் மரணமானார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தை அடுத்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த இவர் சிகிச்சை பலனளிக்காது நேற்று அதிகாலை 2.40 மணிக்கு மரணமானார்.

இச்சம்பவத்தில் வேலணையில் இருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடிப் பகுதியில் வசித்து வந்த அருளானந்தம் வரதலக்ஷ்மி (வயது 36) என்பவரே மரணமானவராவார்.

இவர் யாழ். [illegible] கல்லூரி ஆசிரியை ஆவார். (ஒ-15)

நவராத்திரி விழாக்கள்

யாழ்ப்பாணம் பாண்டியன் தாழ்வு ஸ்ரீநரசிம்ம ஞான வைரவர் ஆலய நவராத்திரி விழாவில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு சமயச்சொற்பொழிவு இடம் பெறும். கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய அதிபர் திரு வி. மாணிக்கம் இச்சொற்பொழிவை ஆற்றுவார். (அ-17)

ஓ ஓ ஓ

யாழ். பட்டப்படிப்புகள் கல்லூரி வெளிவாரி மாணவர் ஒன்றியம் நடத்தும் நவராத்திரி விழா இன்று காலை பத்து மணிக்கு நடைபெறும். விவாத அரங்கு, கவியரங்கு, பல்குரல் ஒலி விநோத நிகழ்வு என்பன விழாவின் சிறப்பு நிகழ்ச்சிகளாக அமையும்.

ஓ ஓ ஓ

வண்ணை கந்தில் உள்ள நெல்லியான் காளி கோவில் முன்றிலில் இன்று பிற்பகல் நடைபெறும் நவராத்திரி விழாவில் பட்டி மன்றம், கவியரங்கு, நாடகம் ஆகியன சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம் பெறும். (அ-28)

ஓ ஓ ஓ

நவாலி வடேசன் தமிழ்ப் பாடசாலை அபிவிருத்திச் சங்க ஏற்பாட்டில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் நவராத்திரி விழாவில் இந்து இளைஞர் பேரவைத் தலைவர் திரு. வே. க. பாலன் சமயப் பேருரை நிகழ்த்துவார். (அ-162)

ஓ ஓ ஓ

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரின் நவராத்திரி விழா தலைமைச் செயலக மண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு நடைபெறும். சமயச் சொற்பொழிவு, கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும் (அ 89)

ஓ ஓ ஓ

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க ஊர்காவற்றுறைப் பிரிவு உப அலுவலகத்தில் இன்று காலை ஒன்பது மணிக்கு நவராத்திரி விழா நடைபெறுகிறது. (அ-28)

ஓ ஓ ஓ

சித்தன்கேணி கலை நகர் இந்து சமய மன்றத்தினரின் நவராத்திரி விழா இன்று மாலை 6 மணிக்கு கலைநகர் நேருஜி கிராம முன்னேற்றச் சங்க முன்றிலில் நடைபெறும். இவ்விழாவில் நவராத்திரி விழாவை ஒட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையே வகுப்புரீதியாக நடத்தப்பட்ட சமய பாடப் பரீட்சைக்குரிய பரிசளிப்பும் இடம்பெறும். (க-175)

ஓ ஓ ஓ

ஏழாலை மேற்கு உதயசூரியன் நூல் நிலையத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு நவராத்திரி விழா நடைபெறும், நவராத்திரி மகிமை பற்றிய பேச்சுப் போட்டி சிறப்பு நிகழ்ச்சியாக அமையும். (அ-45)

கொக்குவில், நந்தாவில் அம்மன் கோயிலில் மகிடாசுர போர் இன்று பி. ப. 6 மணிக்கு நடைபெறுகிறது.

நாளை ஞாயிறு காலை 9 மணிக்கு கைலாச வாகனத்துக்கான அச்சுக் கோர்க்கும் வைபவம் இடம்பெறும். (அ-69)

ஓ ஓ ஓ

சுன்னாகம் லக்கி தனியார் கல்வி நிறுவன நவராத்திரி விழா இன்று நடைபெறுகிறது. சமயச் சொற்பொழிவுகளும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (அ 89)

ஓ ஓ ஓ

கைதடி வடக்கு சனசமூக நிலையத்தினரின் நவராத்திரி விழா நிலைய மண்டபத்தில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறும். விசேட சமயச் சொற்பொழிவுகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (அ-17)

சங்காபிசேகம்

சாவகச்சேரி சங்கத்தானை இத்திவடி வீரகத்தி விநாயகர் ஆலய 15 ஆம் ஆண்டு கூட்டுப் பிரார்த்தனை விழா இன்று நடைபெறும். காலை 8-00 மணிக்கு அஷ்டோத்திர சத சங்காபிசேகம் நடைபெறும். (க-117)

வீரச்சாவு

பொன்னாலையில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே நேற்று முன்தினம் இடம் பெற்ற மோதலில் பெண் போராளிகளான கப்டன் ஒளியிலை அல்லது லஜனி (சோமநாதன்பிள்ளை பரமேஸ்வரி — மட்டக்களப்பு), லெப்டினன்ட் கோவை (சின்னத்தம்பி சாரதாதேவி — கொக்கட்டிச்சோலை) ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்து ஒன்றில் வீரவேங்கை இசையாளன் அல்லது சுமன் (மனுவல் கஜேந்திரன் — குருநகர்) வீரமரணமடைந்தார்.

வாரியார் ஆஸ்பத்திரியில்

மூச்சுத்திணறல் காரணமாக மயக்கமடைந்த நிலையில் திருமுருக கிருபானந்த வாரியார் லண்டனில் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்படுகிறது.

சுவிட்சர்லாந்து மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளில் சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்துவதற்காக வெளிநாட்டுப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்த வாரியார் லண்டனில் தங்கியிருந்த போது மூச்சுத்திணறலுக்குள்ளானார் என்று தெரிவிக்கப்படுகிறது. (த எ)

பாடசாலைகளில்

சண்டிலிப்பாய் மண்டு மண்டை பொன்னம்மான் பாலர் பாடசாலையில் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு திரு. இரத்தினம் குகராசா தலைமையில் நடைபெறும். (க

ஓ ஓ ஓ

அராலி வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை பெற்றோர் தின விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் அதிபர் திரு. மு. ஜெயக்குமார் தலைமையில் நடைபெறும். (க-161)

இலங்கை வங்கி சிற்றூழியருக்கு பரீட்சை

இலங்கை வங்கியின் சிற்றூழியர்களை பதவியுயர்த்துவதற்கான பரீட்சை எதிர்வரும் 30, 31 ஆம் திகதிகளில் நாடுமுழுவதும், உள்ள இலங்கை வங்கியின் மாவட்டக் காரியாலயங்களில் நடைபெற உள்ளன.

இப்பரீட்சைக்கு தோற்றவுள்ள யாழ் மாவட்டத்திலுள்ள இலங்கை வங்கிக் கிளைகளின் சிற்றூழியர்களுக்கு யாழ் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கியின் மாவட்டக் காரியாலயத்தில் 30 ஆம் திகதி 10 மணிக்கும் 31 ஆம் திகதி 9 மணிக்கும் பரீட்சைகள் நடைபெறும் என இலங்கை வங்கியின் யாழ் மாவட்ட முகாமையாளர் திரு கே. கணேசமூர்த்தி தெரிவித்தார். இப்பரீட்சைக்கான வினாத்தாள்கள் வாதுவ கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன. (ஒ-162)

காலத்தில் பயிரிட்டு ஞாலத்தில் உயர்வடைவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மான வேண்டுகோள்

18-10-93 ஆம்று பூரணமில் இருந்து மொகிசரை நோக்கி பயணம் செய்யமில் முக்கிய பொருள்களும் எனது உடமை தொடர்பான முக்கிய தஸ்தா வேஜுகளும் அடங்கிய பிரயாண பையினை கிள் வப்பு கெபாலசுப்பிரமணியம் ஆகிய நான் தவற விட்டுவிட்டேன். இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாண கானிபாலயத்தில் அல்லது சாவகச்சேரி ப. நோ. கூ. சங்க தலைமை அலுவலகத்தில் ஒப்படைத்து உதவு மாறு கேட்டுக் கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

சி. சிவபாலசுப்பிரமணியம்
பொது முகாமையாளர்

சாவகச்சேரி ப நோ. கூ சங்கம்,
சாவகச்சேரி. (இ-6166)

மரண அறிவித்தல்கள்

திருமதி
வரதலட்சுமி அருளானந்தம்

கோவண வடக்கைச் சேர்ந்தவரும், 19/1 வெஸ்ட் கேவரா வீதி, பெருமாள் கோவிடி யாழ்ப்பாணம் எனும் முகவரியை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி வரதலட்சுமி அருளானந்தம் (ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியை யாழ்ப்பாணம்) 22 - 10 - 93 சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் சி. அருளானந்தம் (தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், அர்ச்சுனாவின் அருமைத் தாயாரும், காலம்சென்ற நடராசபிள்ளை — பரமசக்தி தம்பதியரின் அருமைப் புதல்வியும், செ. கிருஷ்ணராசா - நித்தியகாந்தி தம்பதியரின் மருமகளும், சதீசுமதாதன், கலாபதாதன் (கனடா), நித்தியலட்சுமி, விஜயலட்சுமி (கனடா), இராஜேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை கொழும்பு), தனலட்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ் இந்து மகளிர் கல்லூரி), ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகேந்திரகிருஷ்ணன் (பிரதேச செயலகம் சங்கானை) மல்லிகா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரின் இல்லத்தில் 23 - 10 - 1993 வெள்ளிக்கிழமை நடைபெற்று தனைக் கிரியைகள் கோப்பாய் மணல் மயானத்தில் நடைபெறுவதாக எல்லோரும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
வி. அருளானந்தம் [கணவர்]

பெருமாள் கோவிடி,
யாழ்ப்பாணம். (27751)

திருமதி
செல்லையா சிதைப்பிள்ளை

மல்லாகத்தைச் சேர்ந்த திருமதி செல்லையா சிதைப்பிள்ளை நேற்று (23-10-93) காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லையா நீள் அன்பு மனைவியும், திருமதி மகேஸ்வரியின் அன்புத் தாயாரும், க. கோபாலனின் (தலைவர் ஏனிஸ்ட விந்தியாலய முன்னாள் அதிபர்) மாமியாரும், இலங்கை பிரஜைகள் இன்டர் (இலங்கை) லிமிட்டெட் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரு மாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 1.00 மணியளவில் தனைபெற்று பூதவுடல் தனைக் கிரியைகாக மல்லாகம் பொதுமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
க. கோபாலன் (கணவர்)

கோயில் வீதி,
மல்லாகம். 27760)

OBITUARY

P. THEVANAYAGAM

(Retired Technical Officer, Dept of Irrigation) Son of late Mr & Mrs Pavilupillai of Chundikuli, beloved husband of Hyacinth, loving father of Romesh (Japan), Suresh (Germany), Naresh (U.K.), Nargis (U.K.), Rubesh (Norway), Shila and Marina (U.K.), brother of late Mr B P A. Thambinayagam (Retired A G A.), late Mr P J E Arumainayagam (Walker & Greig), Mrs. Ratnam Manuvelupillai, Miss Poopackiam and Mrs Pushpam Antonipillai, brother in law of Mrs Theresa Thambinayagam (U.K.), Mrs Mariammah Arumainayagam, Mr. B Manuvelupillai and Mr N Antonipillai (Ex. M.M.C. expired on 15 10 1993 Funeral on 23-10-1993 at No. 9/1, Duwana Road, Kochchikade.

Mrs M. Arumainayagam.

853, Hospital Rd,
Chundikuli. (27758)

இப்பத்திரிகை மீது உதயன் லிமிட்டெட் (பிரதேச வேத) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் தலைமை அலுவலகத்தில் 23 10 1993 இல் வெளியிடப்பெற்றது.

500 ஈழ ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ந ர க. கனிஸ்ஸர்த்தில் இலங்கைக்கான தூதுவர் மூலம் இலங்கை அரசுக்கு அனுப்பியிருக்கிறது.

கொழும்புக்கு திருப்பி அனுப்பப்படுவோரை கொழும்பில் தனிமைப்படுத்தி வைத்துப் பரா மரிப்பதற்கான ஏற்பாடுகளை ஜனாதிபதியின் சர்வதேச சேவைகள் பிரிவின் வீரக் கோன் மேற்கொண்டு வருகிறார். (உ-8)

படையினரிடம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளை செபதேயு (வயது 54) என்பவருமே விடுவிக்கப் படவேண்டியவர்.

கொலைச் சேர்ந்த சந்தியோகுப்பிள்ளை செபதேயு என்பவர் கொலிக் கடற்பகுதியில் அமைந்திருந்த தனது வீட்டில் பொருள்களை எடுக்கச் சென்ற சமயம் படையினரிடம் இருந்தே கொண்டதாகவும் —

அதன்பின்னர் படையினர் தனது உறவினர் வீட்டில் தங்கியிருந்த தன்னையும் தனது தம்பியையும் அடித்து தலையில் பலமாக ஏற்படுத்தி எடுத்துச் சென்றதாகவும் அவர் தெரிவித்தார்.

அதன்பின் தனியே கண்டெடுக்கப்பட்டு, ரோலி மூலம் பலாலிக்கு கொண்டுசெல்லப் பட்டு அங்கு தனி அறையில் பூட்டி வைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

படையினரிடம் இருந்து இறந்து திருப்பலாம் எனக் கருதப் பட்ட அவர் நேற்று விடுதலை செய்து வந்தார் உறவினர்கள் பெருமகிழ்ச்சி அடைந்தனர். (ஒ-3-15-17)

சமத்தமிழரின் ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிடபடியிருக்கும் முக்கிய விட யங்கள் வருமாறு:-

★ இலங்கை வாழ் தமிழர் களுக்கு தமது அரசியல் அந் தஸ்தை தேர்ந்தெடுக்கும் உரிமை — சுயநிர்ணய உரிமை — உண்டு என்பதை கொழும் பைத் தலைமையகமாக கொண்ட அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

★ இலங்கை இனப்பிரச் சினைக்கு காணப்படும் எந் தத் தீர்வும் கூடிய தன்னாட் சியை வலியுறுத்தும் தமிழர் களின் கோரிக்கையை நிறை வேற்றும் வகையில் அமைந் திருக்க வேண்டும் என அரச சார்பற்ற அமைப்புக்கள் பல குறிப்பிட்டிருக்கின்றன.

அண்மையில் ஜெனிவாவில் நடைபெற்ற ஐ நா சபை யின் உரிமைக் மாநாட்டில், தமிழ் மக்கள் சார்பாக இலங்கை அரசு கலந்துகொள்ளப்பட வேண்டும் என அரசசார்பற்ற நிறுவனங்கள் கொண்டு வந்த பிரேரணையையும் "கொழும் பைத் தலைநகராகக் கொண்ட அரசு" என்ற சொற்பதம் நீக்கப்பட்டுள்ளது. (உ-8-6)

வெருகல் முகத்துவாரத்தில் 4 வேங்கைகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஒக் 23

கடந்தவருடத்தின் இறுதி மாதமான 6.30 மணியளவில் மட்டக் களப்பு வெருகல் முகத்துவா ரத்தைச் சுற்றிவளைத்த இரா ணுவத்தினருடன் நடந்த மோதலில் ஒரு போராளியும், ஒரு துரோகியும் வீர ச் சாவு அடைந்தனர்.

இதேவேளை இந்தச் சம்ப வம் நடைபெற்றுக் கொண்டி ருந்த சமயம் இரு போராளி கள் நீலகிரியில் வீரச்சாவை தழுவிக்கொண்டனர்.

மேஜர் ரவீந்தர் (வைரவ மனோகரன் - திருகோணமலை), லெப்டினன்ட் ஜெகதீஸ்வரகுமார் அல்லது நொபீல் (சபாபதி செல்வராஜன் — வாகரை), வீர வேங்கை சத் தியநாதன் அல்லது விக்ரர் (யோகானந்தம் நோ வெஸ் தருணராஜ் - மன்னார்) ஆகி யோரும் புலேந்திரன் என்ற துரோகியுமே வீரமரணம் அடைந்தவர்களாவர். (உ-8)

இந்துக் கல்லூரி நிறுவுநர் தினம்

யாழ்ப்பாணம் இந்துக் கல் லூரி பழைய மாணவர் சங்கம் கல்லூரியுடன் இணைந்து நடத்தும் கல்லூரி நிறுவுநர் தினம் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ்நகர் பிரதேச செய லாளர் கலாநிதி சற்குணா னந்தராஜா "தமிழர் பாரம் பரிய பிரதேச நில ஆயிருந் தியும் குடியேற்றத் திட்டம் களும்" என்ற தலைப்பில் நிறுவுநர் தினச் சொற்பொழி வினை நிகழ்த்துவார். (உ)

தபால் பொதிகள் இறக்கப்பட்டன

வாதுவ கப்பலில் எடுத்து வரப்பட்ட தபால் பொதி களில் மற்றொரு தொகுதி நேற்று இறக்கப்பட்டது.

கப்பலில் கொண்டு வரப் பட்டிருந்த 611 பொதிகளில் ஒரு தொகுதி நேற்று முன் தினம் இறக்கப்படாமல் விட்டது என்பது தெரிந்ததே.

வெளிநாட்டு மற்றும் வெளி மூர் தபால்கள் நேற்று விநி யோகிக்கப்பட்டதாக குறிப் பிடத்தக்கது (ஒ-109-17)

குவாக்கர் குழு சந்திப்பு

யாழ்ப்பாணம் வந்திருக்கும் 'குவாக்கர்' சமாதானக் குழு வினர் நேற்று யாழ். செயல கத்தில் மேதகு அரசாங்க அதிபர் திருமதி பத்மினியம்மா நிலகநாதனைச் சோலைச் சந்தித்து குடாநாட்டின் தற் போதைய பிரச்சினைகள் தொடர்பாக கருத்துப் பரி மாறினர்.

அரச சார்பற்ற நிறுவனங் களின் பிரதிநிதிகளுடனும் அவர்கள் உரையாடினர்.

யாழ். குடாநாட்டிலிருக்கும் அவர்கள் நேற்று விஜயம் செய்தனர். (உ-16)

மக்கள் ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எல்லிஸ்பையாளோர் காய மடைந்தனர் என்றும், அவர் களில் பலர் ஆபத்தான நிலை யில் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் பி. பி. ஸி. தெரிவித்தது.

பதவியாளரின் உடலே இருக்கும் திகிரியாதனை சர வடையுமாறு கோரி கடந்த ஒரு வாரகாலமாக இராணு வத்தினர் ஆனைச் சுற்றி வளைத்து நிற்கின்றனர் என் பது தெரிந்ததே. (ஒ 6)

கொழும்பில் கைது தொடர்கிறது

கொழும்பில் தமிழ் இளை ஞர்கள் யாரையும் நடவடிக் கைகள் தொடர்ந்து இடம் பெற்று வருவதாகத் தெரிவிக் கப்படுகிறது.

பம்பலப்பிட்டியில் ஆலயம் ஒன்றுக்குச் சென்ற 10 தமிழ் இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என றும் —

தமிழ் அமைச்சர் ஒருவரின் தலையீட்டை அடுத்து அவர் கள் அனைவரும் விடுவிக்கப் பட்டனர் என்றும் தெரிவிக்கப் படுகிறது. (உ-8)

வடமராட்சி நோக்கி ஷெல்

நேற்று முன்தினம் வியாழக் கிழமை இரவு 10 மணியளவில் பலாலி முகாமில் இருந்து வடமராட்சி பிரதேசத்தை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதாக இராணுவ தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயப் பிரதேசம், பெரிய கடற்கரை, மயிலிட்டி தனை கடற்பிரதேசம் மற்றும் பத்தமேனி பகுதிகளில் ஷெல் குண்டுகள் விழுந்து வெடித்தன. (ஒ-155-15 109)

வதிவிட வேளாண்மை போட்டி

1993—94காண வதிவிட வேளாண்மை போட்டி தொடர்பான கருத்தரங்கு ஒன்று இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் தமிழ்ழ பொருளியல் மேம் பாட்டு நிறுவனத்தில் கோல் டாவிலில் உள்ள பாம் மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதேச செயலாளர் கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (இ-168)

யாழோசை இசை வகுப்புகள்

விஜயதசமி ஞாயிறு (24 - 10 - 93)
காலை 9 மணிக்கும் மாலை 4 மணிக்கும்

DRUMS	வாய்ப்பாட்டு
GUITAR	வீணை
ORGAN	வயலின்
MELODICA	புல்லாங்குழல்
	தபேலா

புதிய புதிய வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன

யாழோசை

61. பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
(27679) யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org